## இயல் 2 – 2.4 வெட்டுக்கிளியும் சருகுமானும்

முன்னுரை:

நம் முன்னோர்கள் காடுகளில் எவ்வாறு வாழ்ந்தனர் என்பதை வருங்காலத் தலைமுறையினர் மறந்துவிடக்கூடாது என்று எண்ணி, காடுகள், செடிகொடிகள், விலங்குகள், தொடர்பான கதைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கும் பேரன் பேத்திகளுக்கும் சொல்லி வந்தனர். அத்தகைய கதைகளுள் ஒன்றைப் பின்வருமாறு காணலாம்.

வெட்டுக்கிளியும் சருகுமானும் :

நடுக்காட்டில் குறிஞ்சி நிலப் புதரில் பச்சை வெட்டுக்கிளி வாழ்ந்து வந்தது. ஆனால் அது ஒரு வாயாடியாகும். ஒரு மாலை நேரத்தில் கூரன் என்ற ஒரு பெண் சருகுமானைக் கண்டது. என்ன கூரன்? உன்னைப் பார்த்து நெடுநாளாகி விட்டதே! நீ எங்கே போயிருந்தாய்? உடனே, அதற்கு சருகுமான், இந்தக் காட்டின் அந்தக் கோடியில் இருந்தேன். ஆனால், உன்னிடம் இப்பொழுது பேச எனக்கு நேரமில்லை. என்னைப் பித்தக்கண்ணு துரத்திக் கொண்டு வருகிறது. நான் இங்கு ஒளிந்து கொள்கிறேன். பித்தக்கண்ணு உன்னிடம் கேட்டால் எனக்குத் தெரியாது என்று கூறிவிடு என்றது. சரி என்று வெட்டுக்கிளியும் கூறியது.

வெட்டுக்கிளியும் பித்தக்கண்ணும்:

கூரனைத் தேடி வந்த பித்தக்கண்ணு (உறுமிக் கொண்டே) கூரன் இங்கு வந்தாளா? என்று கேட்டது. அதற்கு வெட்டுக்கிளி பித்தக்கண்ணுவை அருகில் பார்த்தவுடன் மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்து குதித்து கூரன் (சருகுமான்) ஒளிந்திருக்கும் இடத்தின் அருகே சென்றது. உடனே, பித்தக்கண்ணு கூரன் ஒளிந்திருக்கும் இடத்தருகே சென்று நுகர்ந்து பார்த்தது, அங்கு புனுகுப் பூனையின் துர்நாற்றமே வீசியது. உடனே அவ்விடத்தை விட்டு வேறு பக்கம் தேடச் சென்றது.

சருகுமானும் வெட்டுக்கிளியும்:

கூரன் (சருகுமான்) புதரிலிருந்து வெளியே வந்ததும் கோபமாக முட்டாள் வெட்டுக்கிளியே! இனிமேல் நீ இப்படிச் செய்தால், மறுபடியும் வந்து உன்னை என் கூர்மையான பாதத்தால் மிதித்து நசுக்கிவிடுவேன் என்று கூறிக் கொண்டு காட்டுக்குள் ஓடியது.

முடிவுரை:

அன்றிலிருந்து சருகுமானின் (கூரன்) கூர்மையான பாதங்கள் தன்மீது பட்டுவிடுமோ என்ற அச்சத்தில் இன்றும் வெட்டுக்கிளிகள் ஓர் இடத்தில் நிலைத்து நில்லாமல் குதித்துக் கொண்டே உள்ளன. நாம் வெட்டுக்கிளிபோல் வாழாமல் பிறருக்கு நன்மை செய்தே வாழ வேண்டும்.

நீதி: வாக்குறுதி கொடுத்தால் மீறக் கூடாது.